## DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI

**17/12/2020. அமர்வு வழக்கு எண். 40/2013 அ.சா. 16 மனு அனுமதியின் பேரில் சாட்சி திரு. நாகராஜ், நீதிமன்ற அனுமதியின் பேரில் இன்று மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பு வழக்கறிஞரின் குறுக்கு விசாரணை.**

இந்த வழக்கில் 13.6.2012ம் தேதி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரி. நான் வழக்கு பதிவு செய்த அன்றைய தினம் சம்பவ இடத்திற்கு சென்று பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரி. இரவு நேரம் என்பதால் அன்றைய தினம் பார்வை மகஜர் தயார் செய்யவில்லை. பார்வை மகஜரில் எத்தனை மணிக்கு தயார் செய்தேன் என்று பார்வை மகஜரில் குறிப்பிட்டிருக்கிறேனா என்றால் சரி. சம்பவ இடத்தில் வசித்து வந்த நபர்களை பார்வை மகஜர் சாட்சிகளாக போடவில்லை என்றால் சரி. பார்வை மகஜர் சாட்சிகளாக விசாரித்த சு.செல்வவேல் என்பவர் பக்கத்து கிராமம் என்றால் சரி. அ.சா.8 சேகர் கருவட்டம்பாளையத்தைச் சேர்ந்தவர் என்றால் சரி. அவர் பக்கத்து கிராமத்தைச் சேர்ந்தவர். அதிலும் அவர்கள் கையெழுத்திடும் போது நேரம் குறிப்பிடவில்லை என்றால் சரி. நான் தயார் செய்த மூன்று கைப்பற்றுதல் மகஜர்களிலும் நேரம் பின்னிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் தவறு. பொருட்களை கைப்பற்றிய இடத்தை பொறுத்து நாலு திசைகள் அதில் குறிப்பிடவில்லை என்றால் சரி. சான்றுப் பொருட்கள் கைப்பற்றியதாக சொல்லப்படும் இடம் விநாயகபுரம் முட்புதர் திறந்த வெளி பகுதி என்றால் சரி. அது யார் வேண்டுமானாலும் வந்து போகலாம் என்றால் சரி. சாட்சிகளை விசாரணை செய்து ஆவணங்களை பரிசீலித்து அதன் அடிப்படையில் குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்படும் என்றால் சரி. குரல்வளை எலும்பு சரியாக உள்ளது என்று எழுதி, அதனை அடிக்கப்பட்டு பிராக்சர் என்று குறிப்பிட்டுள்ளது, பின்னிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரி. மேற்படி ஆவணத்தில் பிரிண்டட் பார்மில் இருந்த இன்டாக்ட் என்பதை அடித்து விட்டு தான் பிராக்சர் என்று எழுதி உள்ளார். அதே போன்று நெகட்டிவ் என்று எழுதப்பட்டிருந்த வாசகத்தை அடித்து விட்டு பாசிட்டிவ் என்று எழுதி உள்ளது என்றால் சரி. குரல்வளை அறிக்கையில் உள்ள

அடித்தல், திருத்தல் உள்ளது தொடர்பாக மருத்துவர் செல்வராஜ் அவரை விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை. அதற்கான காரணத்தை குறித்து அவரிடம் வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரி. அந்த அறிக்கையில் அடித்தல், திருத்தல் பக்கத்தில் கவுன்டர் சைன் போட்டிருந்ததால் அது குறித்து நான் விளக்கம் பெறவில்லை. குரல்வளை அறிக்கையில் நான் கூறுவது போல் கவுன்டர் சைன் போடவில்லை என்றால் சரி. புகார் கொடுத்த ரமேஷ் கண்டக்டராக பணி புரிந்து வந்தார் என்றால் சரி. 13.6.2016ம் தேதி அன்றைய தினம் அவர் விடுப்பில் இருந்தார் என்பதற்காக அவருடைய வருகைப் பதிவேடு நகலை இந்த வழக்கில் ஆதாரமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. மேலும், அவர் டூட்டி மேனேஜரையும் அரசுத்தரப்பு சாட்சியாக காட்டி விசாரணை செய்யவில்லை என்றால் சரி. சம்பவம் நடந்ததாக சொல்லப்பட்டுள்ள அ.சா.1 ரமேஷ் வீடு கிழக்கு , மேற்கு செல்லும் மன்னார்பாளையம் டூ பெரியகல்லாப்பாடி மெயின்ரோடு , மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி மற்றும் போக்குவரத்து உள்ளது பகுதி என்று சொன்னால் சரி. குடியிருப்பு மிகுந்த பகுதி என்று சொன்னால் சரி. வழக்கு சம்பவம் நடைபெற்றது என்று மன்னார்பாளையம் பகுதியில் இருந்து யாரும் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரி. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் இருந்து தச்சம்பட்டு காவல் நிலையத்திற்கு வாகனத்தின் மூலம் வந்தால் 10 நிமிடத்திற்குள் வந்து விடலாம் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 6 மணி நேரம் காலதாமதமாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரி. மன்னார்பாளையத்தில் இருந்து திருவண்ணாமலை அரசு மருத்துவமனைக்கு வர வேண்டும் என்றால் தச்சம்பட்டு, காவல் நிலையம், திருவண்ணாமலை நகர காவல் நிலையம், கடந்து தான் வர வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. அதன் வழியாக தான் மருத்துவமனைக்கு வர முடியும் என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1. ரமேஷ் என்பவர் கொடுத்த புகார் மனுவில் வெங்கடேசன் என்பவரை கழுத்தை நெறித்ததாகவோ, அல்லது முறித்ததாகவோ குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரி. அ.சா.1. ரமேஷ் 13.6.2012ம் தேதி மதியம் 12.30 மணிக்கு என்னுடைய நிலத்தில்

தண்ணீர் பாய்ச்சி விட்டு வந்த போது எதிரிகள் இரு சக்கர வாகனத்தில் வந்து உன் தம்பியை அடக்கமாட்டாயா எனறு கேட்டதை என்னுடைய விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரி. என் தம்பி அணிந்திருந்த லுங்கியில் ரத்தக்கறை இருந்ததாக எனது விசாரணையில் கூறவில்லை என்றால் சரி. ரத்தக்காயம் இருந்ததாக மட்டும் தான் கூறினார். அதே போல் வழக்கில் இறந்த வெங்கடேசனின் மனைவி அம்பிகா மற்றும் அவரது உறவினர்களை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரி. அம்பிகா சம்பவத்தின் போது இல்லை என்பதால் அவரை விசாரிக்கவில்லை. அவரது தாயார் சம்பவத்திற்கு முன்பே இறந்து விட்டார். வெங்கடேசன் இறப்பதற்கு 3 மாதத்திற்கு முன்பு தான் அவருக்கு திருமணம் நடைபெற்றது என்றால் சரி. அ.சா.1. அவர் புகார் மனு மற்றும் என்னுடைய விசாரணையின் போது கருவட்டான்பாறையைச் சேர்ந்த சேகர் என்பவரின் ஆட்டோவில் தான் மருத்துவமனைக்கு சென்ற விவரத்தை கூறவில்லை என்றால் சரி. இந்த வழக்கின் செல்போன் வெங்கடேசன், சின்னதம்பி ஆகியோர்களின் செல்போனை சான்றுப்பொருளாக கைப்பற்றவில்லை என்றால் சரி. வெங்கடேசன் அம்மா தனலட்சுமி என்பவர் அரம்ப சுகாதார பள்ளியில் சத்துணவு அமைப்பாளராக இருக்கிறார் என்றால் சரி. அவர்களும் 13.6.2016ம் தேதி அவர்களும் பள்ளியில் இருந்தார்களா என்பதற்காக பணிப்பதிவேட்டு விவரங்கள் மற்றும் அது தொடர்புடைய சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றால் சரி. பிரேத விசாரணை 4-வது காலத்தில் 14.6.2016ம் தேதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் 13.6.2016ம் தேதி தான் மேற்படி சம்பவம் நடைபெற்றது. அ.சா.1. ரமேஷ் குடும்பத்திற்கும் , எதிரிகள் குடும்பத்தாருக்கும் ஏற்கனவே முன் விரோதம் இருந்தது என்றால் சரி. எதிரிகள் மீது தவறாக பழிவாங்க வேண்டும் என்ற தீய எண்ணத்துடன் கொடுக்கப்பட்ட பொய்யான புகார் என்றால் சரியல்ல. சரியாக விசாரிக்காமல் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இறந்த வெங்கடேசனுக்கும் , எதிரிகளுக்கும் எந்தவித சம்மந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. வெங்கடேசன் இறப்பதற்கு 3 மாதங்களுக்கு திருமணம் ஏற்பட்டது. அவர் குடும்பத்தில்

ஏற்பட்ட சந்தேகத்தினாலும், பிரச்சினையாலும் தான் வெங்கடேசன் இறந்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. பொய்யான புகார் ஒன்று எதிரிகள் மீது தாக்கல் செய்யப்பட்டு அதனை சரியாக விசாரிக்காமல் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மறு விசாரணை. இல்லை.

ஒப்பம்/- நாகராஜ்

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/- C. Thirumagal
Principal Sessions Judge,
Tiruvannamalai.